<u>IN THE COURT OF CHIEF JUDGE, SMALL CAUSES, CHENNAI</u>

M.C.OP.No.5944/2019 DATE :20.03.2024

Deposition of Witness : P.W.1

Name : Mrs. Syedali Fathima

Husband Name : Mr. S. Shagul Hameed

Age & Occupation :

Address :

Cell Phone No :

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873.

<u>1வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

சாலை விபத்தில் என் கணவர் இறந்ததற்காக இழப்பீடு கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன். 2 மற்றும் 3 மனுதாரர்கள் என் மக்கள். இழப்பீடு கேட்டு வேறு எங்கும் மனு தாக்கல் செய்யவில்லை. எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக நான் 3வது சிறுவழக்குகள் நீதிமன்றத்தில் MCOP.5950/2019 என்ற மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. எனக்கும் என் கணவருக்கும் ஒரே சம்பவத்தில்தான் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்தினை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் தவறு. விபத்து பாரிமுனையில் வைத்து நடந்தது என்றால் சரிதான். National மருத்துவமனையில் விபத்து தேதியில் சிகிச்சை பெற்றதற்கு விபத்து பதிவேடு நகல் பெறப்பட்டது. அது மசாஆ 17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. விபத்து குறித்து மண்ணடி பகுதிக்குட்பட்ட காவல் நிலையத்தில் வழக்கு பதியவில்லை என்றால் தெரியவில்லை. விபத்து குறித்து நான் புகார் கொடுக்கவில்லை. அந்த சமயத்தில் நானும் அடிபட்டு சிகிச்சையில் இருந்தேன். விபத்து நடந்த தேதியிலிருந்து 8.8.2019 வரை என் கணவருக்கு மருத்துவமனையில் தொடர் சிகிச்சை எதுவும் பெறவில்லை என்றால் தவறு. ஆரம்பத்தில் மருத்துவமனையில் சிகிச்சை அளித்தபோது தலையிலும் நெஞ்சு எலும்பிலும் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று 8.8.2019 தேதியில் பதிவு செய்யப்பட்டிருந்தது. இடையில் நான் வீட்டில் வைத்து செவிலியர் கொண்டு என் கணவரை பராமரித்து வந்தேன். 8.8.2019 தேதியில் மருத்துவமனைக்கு கிளம்பும்போது என் கணவர் இறந்துவிட்டார். National மருத்துவமனையில் விபத்து நடந்த அன்று மட்டுமே என் கணவர் சிகிச்சை பெற்றார். National மருத்துவமனையில் வழங்கப்பட்ட Discharge summary தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதை தாக்கல் செய்யாததற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா என்றால் அந்த சமயத்தில் நானும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததால் அது குறித்து சொல்லத்தெரியவில்லை. என் கணவர் National மருத்துவமனையில் வெளிநோயாளியாக மட்டுமே சிகிச்சை பெற்றார் என்றால் நானும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. National மருத்துவமனையில் என் கணவருக்கு தலையில் Scan எடுப்பதற்காக வழங்கப்பட்ட மருந்து சீட்டு எதுவும் உள்ளதா என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. மசாஆ 17 விபத்து பதிவேட்டில் என் கணவரின்

தலையிலும் நெஞ்சு எலும்பிலும் காயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் காலில் அடிபட்டு இரத்தம் ஒழுகிக்கொண்டு இருந்ததால் மருத்துவர்கள் அதில்தான் கவனம் செலுத்தினார்கள். என் கணவருக்கு தலையிலும் நெஞ்சு எலும்பிலும் காயம் எதுவும் ஏற்படவில்லை என்பதால்தான் மசாஆ 17ல் அது குறித்து சொல்லப்படவில்லை என்றால் தவறு. என் கணவருக்கு Scan எடுத்தார்கள். மனுவிலும் பிரமாண பத்திரத்திலும் எந்த நிலையததில் scan எடுத்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் கணவருக்கு தலைக்கு scan எடுக்கவில்லை என்பதால்தான் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. என் கணவருக்கு தலையிலும் நெஞ்சு எலும்பிலும் காயம் ஏற்பட்டிருந்தால் என் கணவரை விபத்து தேதியில் மருத்துவமனையிலிருந்து விடுவித்திருக்கமாட்டார்கள் என்றால் தவறு. National மருத்துவமனையிலிருந்து என் கணவரை நேராக வீட்டிற்கு அழைத்துச்சென்றேன். வீட்டில் வைத்து என் கணவரை செவிலியரை வைத்து பார்த்துக்கொண்டதாக மனுவிலும் பிரமாண பத்திரத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். புத்தூருக்கு என் கணவரை 30ம் தேதி அழைத்துச்சென்றேன். புத்தூருக்கு அழைத்துச்சென்ற தேதியை மனுவிலும் பிரமாண பத்திரத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எலும்பு தவறாக கூடிவிட்டார் புத்தூரில் அதனை உடைத்து மீண்டும் சரியாக கட்டு போடுவார்கள் என்றால் நான் என் கணவருக்கு சிகிச்சை அளித்தபோது அறைக்கு வெளியே இருந்ததால் அவருக்கு என்ன வகையான சிகிச்சை அளிக்கப்பட்டது என்று தெரியாது. புத்தூர் மருத்துவரிடத்தில் என் கணவருக்கு என்ன வகையான சிகிச்சை அளிக்கப்பட்டது என்று கேட்கவில்லை. எனக்கும் விபத்தில் அடிபட்ட வலி இருந்ததால் எதைப்பற்றியும் நான் கேட்கவில்லை. புத்தூரில் சிகிச்சை பெற்றால் நோட்டுபுத்தகத்தில் அது குறித்து எழுதிக்கொடுப்பார்கள் என்றால் சரிதான். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் கணவர் இறந்ததற்கு பின்னிட்டு நான் குடும்பத்துடன் செங்கோட்டைக்கு சென்றுவிட்டதால் மேற்சொன்ன ஆவணங்கள் உள்ளதா என்று தெரியவில்லை. புத்தூரில் சிகிச்சை பெற்றால் பத்திய உணவு சாப்பிட வேண்டும் என்றால் சரிதான். என் கணவருக்கு மேற்சொன்னவாறு பத்திய சாப்பாடு உண்ண வேண்டும் என்று சொல்லியும் அதனை பின்பற்றாத காரணத்தினால் தான் என் கணவர் இறந்தார் என்றும் விபத்தின் காரணமாக அவர் இறக்கவில்லை என்றும் சொன்னால் தவறு. புத்தூர் சிகிச்சைக்கு பின்னிட்டு என் கணவரை ஆங்கில மருத்துவம் பார்க்கப்படும் எந்த மருத்துவமனையிலும் சிகிச்சை பெறவில்லை என்றால் சரிதான்.புத்தூர் சிகிச்சை என்பது நிரூபிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை அல்ல என்றும் அதன் காரணத்தினால்தான் என் கணவர் இறந்தார் என்றும் சொன்னால் தவறு. விபத்து ஏற்பட்ட பிறகு என் கணவர் இறக்கும் வரையிலும் நடக்கும் சூழ்நிலையில் இல்லை என்றால் சரிதான். இந்நிலையில் என் கணவர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தாக சொல்வது பொய் என்றால் தவறு. என் கணவர் ஆம்புலன்ஸில் அவரது நண்பர்களால் அழைத்து செல்லப்பட்டு புகார் கொடுக்கப்பட்டது. என் கணவர் கொடுத்த புகாரின் நகல் எதுவும்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதற்காக அதனை தாக்கல் செய்யவில்லை என்று ஞாபகமில்லை. என் கணவர் கொடுத்த புகாரில் என் கணவரின் தலையிலும் நெஞ்சு எலும்பிலும் காயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 10.8.2019ல் என் கணவர் புகார் கொடுத்ததாக மசாஆ 2ல் களம் 3Bல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு. காவல் நிலையத்தில் தகவல் கிடைத்த நாள் 10.8.2019 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மசாஆ 2ல் என் கணவர் எந்த தேதியில் புகார் கொடுத்தார் குறிப்பில்லை என்றால் சரிதான். என் கணவர் 8.8.2019ல் இறந்துவிட்ட நிலையில் 10.8.2019ல் புகார் கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் முன்பே புகார் கொடுத்தார். மசாஆ 2 இந்த வழக்கிற்காக சிருஷ்டணை செய்யப்பட்டது என்றால் தவறு. சிந்தாதிரிப்பேட்டை உதவி ஆணையர் அலுவலகத்திலிருந்து என் கணவரின் புகார் forward செய்யப்பட்டது என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. மசாஆ 2ல் களம் 14ற்கு மேல் உள்ளது யாருடைய கையெழுத்து? அது என் கணவருடைய கையொப்பம். பின்னிட்டு சாட்சி என் கணவருடைய கையொப்பம் இல்லை என்று சொல்கிறார். மீண்டும் அவர் யாருடைய கையொப்பம் என்று தெரியவில்லை என்று சொல்கிறார். மசாஆ 1 முதல் தகவல் அறிக்கையில் National மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தபோது எனக்கு பெரிதாக காயங்கள் ஏதுமில்லை என்றும் என் கணவருக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதாக தெரிவித்தார்கள் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மசாஆ 1 முதல் தகவல் அறிக்கையில் என் கணவருக்கு தலையிலும் நெஞ்சிலும் காயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

<u>இருதரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை இத்துடன் நிறுத்திவைக்கப்படுகிறது.</u>

Taken down to the words of the witness in my presence in the open Court and was read over to the Witness and accepted by him/her to be correct.
Date:20.03.2024.

Sd/- J. Sridevi,
Chief Judge,
Court of Small Causes.